பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 26 வெள்ளிக்கிழமை (10-07-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 225

# இயக்கச்சிக்கு முன்னேற முயலும் படையினர் மீது புலிகள் கடும் தாக்கு

## இராணுவத் தரப்பில் பேரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

வாடியடியில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்காப் படையினர் கடந்த மூன்று நாட்கள் இடைவெளியின் பின்னர் நேற்று மீண்டும் இயக்கச்சியை நோக்கி முன்னேறுவதற்குப் பெரும் முயற்சி செய்து வருகின்றனர்.

முன்னேற முயலும் படையினருடன் விடுதலைப் புலிகள் வீரர்கள் ஆக்கிரோஷமாக மோதி வருகின்றனர்.

நேற்றைய மோதலில் படையினருக்கு மிகப் பெரிய அளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கனரக வாகனங்கள் சகிதம் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் —

அவர்களுக்கு உதவியாக ஆனையிறவு, வெற்றிலைக் கேணி முகாம்களில் இருந்து அகோர ஷெல் தாக்குதல் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

பொம்மர்களும், ஹெலிகளும் வழமைக்கு மாறாக மிக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய வெளியுறவு அமைச்சர் கொழும்பில் பேச்சுவார்த்தை

கொழும்பு, ஜூலை 10

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வர்டோ பெலறோ நேற்று கொழும்பில் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்தைப் சந்தித்து பேச்சு நடத்தினார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான பிரதான சந்தேக நபர்களை இந்தியாவுக்கு அனுப்பிவைப்பது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்துவதற்கு இந்திய அதிகாரிகள் குழு ஒன்று கொழும்புக்கு விஜயம் செய்ய அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினை குறித்தே இரு அமைச்சர்களும் பேச்சுக்கள் நடத்தினர்.

இந்தியக் குழுவை கொழும்புக்கு விஜயம் செய்ய அனுமதிப்பது, இலங்கையின் நாடு கடத்தும் சட்டத்திற்கு எதிரானதாக அமையும் என்று அமைச்சர் ஹேரத் இந்திய அமைச்சருக்கு அப்போது தெரிவித்தார். [இ-எ]

## வெட்டுப் புள்ளிகள் குறித்து கல்விமான்கள் அதிர்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 10

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் குறித்து கல்விமான்கள் அதிர்ச்சி வெளியிட்டனர்.

பல்கலைக்கழகத்தில் சேருவதற்குத் தகுதியிருந்தும், புதிய திட்டத்தால் யாழ்ப்பாண மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கவலை வெளியிட்டனர்.

பௌதிக விஞ்ஞானம், மற்றும் உயிரியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளைச் சேர்ந்த மாணவர்களே பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பல்கலைக் கழகத்துடன் தொடர்புடைய முக்கிய பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிடுகையில்—

''வெட்டுப் புள்ளிகளை நோக்கும்போது அது ஒரு சீரான திட்டத்தின் கீழோ அல்லது ஏதோ ஒரு முறையின் கீழோ மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை'' என்று கூறினார். [ஒ-3]

## பல்கலைக் கழக அனுமதி முறை:

## வழக்குத் தாக்கல் செய்ய பிரதிநிதிகள் கொழும்புக்கு

### அமைச்சரையும் சந்திப்பர்

யாழ்ப்பாணம், ஜூலை 10

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள திட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறு உயர் கல்வி அமைச்சரை நேரில் சந்தித்து வற்புறுத்துவதற்காகவும்—

அரசின் திட்டத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்காகவும்—

இங்கிருந்து இரு குழுக்கள் நாளை சனிக்கிழமை கொழும்பு செல்லவிருக்கின்றன.

கல்லூரி அதிபர்கள், பெற்றோர், மாணவர்கள் தரப்பிலும் மற்றும் தமிழர் ஆசிரியர் சங்கம் தரப்பிலும் பிரதிநிதிகள் இந்தக் குழுவில் அங்கம் பெறுகின்றனர். [ஒ-3]

## தபால் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொழும்பிலிருந்து 'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட தபாற் பொதிகள் நேற்று மாலை யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்துக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

அவை அந்தந்தப் பகுதி தபாலகங்களுக்கு இன்று அனுப்பி வைக்கப்படும். என்று பிரதம தபாலக வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

யாழ். நகரப்பகுதித் தபால்கள் இன்று விநியோகிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை ''காத்துக் கொண்டிருப்போரும் காரணம் காட்டுவோரும்'' என்னும் தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான செய்தி குறித்து பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. ச. மா. சேதுகாவலர் பின்வரும் தகவல்களைத் தெரிவித்துள்ளார்;-

★ குமண கப்பலில் 549 தபாற் பொதிகள் வந்திருப்பது பற்றிய செய்தி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் 6. 7. 92இல் யாழ் பிரதம தபாலகத்துக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# 17 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொம்படி - வாடியடிப் பகுதியில் இருந்து கொம்படி - இயக்கச்சி வீதியின் இருபக்க முனைகளாலும் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்ட ஸ்ரீலங்காப் படையுடன் தீரமுடன் சமர்புரிந்து 17 வேங்கைகள் நேற்று வீரமரணமடைந்தனர்.

அவர்கள் விவரம்:-

★ ஈழவேந்தன் [சுப்றா] [பாலசுந்தரம் சதீஸ் — அளவெட்டி]

★ லெப். வீமா [ரவீந்திராதேவி தங்கராசா — புத்தூர்]

★ 2 ஆம் லெப். ஜேர்ணா [வசந்தரூபி தில்லையம்பலம் — யாழ்ப்பாணம்]

★ லெப். வதனி [பவானி சின்னன் — மல்லாவி]

★ செழியன் [கந்தன் குமணன் — வல்வெட்டித்துறை]

★ தமிழ்மாறன் [நெல்லிநாதன் விவேகானந்தன் — வட்டுக்கோட்டை]

★ குமரவேல் [சிவப்பிரகாசம் பரமசீலன் — மல்லாகம்.]

★ நகைமுகன் [அருணகிரி சற்குணராசா — யாழ்ப்பாணம்]

★ புலவர் [பொன்னையா மதியழகன் — மட்டக்களப்பு]

★ ஆதவன் [குகன் திருமாறன் — வல்வெட்டித்துறை]

★ சொக்கன் [கிறிஸ்டி ராஜகுமார் — நல்லூர்]

★ அன்பழகன் [பழனி கோபாலர் விஸ்வேஸ்வரன் — நல்லூர்]

★ சத்தியவான் [அலோசியஸ்] [சுந்தரலிங்கம் மோகனதாஸ் — தொண்டமானாறு]

★ ஜெகதீசன் (டானியல்) [அருளம்பலம் கிருபாகரன் — திருகோணமலை]

★ லெப், சேந்தன் [பரம்சோதி நிறஞ்சன் — அல்வாய்]

★ அறிவொளி [வர்ணன்) [தங்கலிங்கம் சிவகுமார் — அளவெட்டி வடக்கு]

★ இளையவன் [பாலு] [அந்தோனிப்பிள்ளை செல்வகுமார் — கைதடி] [இ-3]

## இரத்தம் கோரி அவசர வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இரத்ததானம் செய்யுமாறு பொதுமக்களுக்கு அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [இ-15]

## பலியான விமானி அமெரிக்காவில் பயிற்சி பெற்றவர்

கொழும்பு, ஜூலை 10

விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட சகடை விமானத்தின் பிரதம விமானியான பலியான ஸ்குவாட்ரன் லீடர் பைசால் கஸீர் விமானம் ஓட்டுவதில் அமெரிக்காவிலும், இந்தியாவிலும் விசேட பயிற்சி பெற்றவர் என்று தெரிவிக்கப்பட்டது.

மொறட்டுவைச் சேர்ந்த இவர் 1979 ஆம் ஆண்டு விமானப் படையில் சேர்ந்தார். [ஒ-3]

## மாவீரர்களின் புகழுடல்கள் இன்று மக்கள் அஞ்சலிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10

நேற்று மாவீரர்களான வேங்கைகளின் புகழுடல்கள் இன்று வெள்ளி பிற்பகல் 2 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திலுள்ள புனித புதைகுழிகளில் விதைக்கப்படும்.

வடமராட்சிப் பிரிவிலும் தென்மராட்சிப் பிரிவிலும் அவ்வப் பிரிவிலுள்ள மாவீரர்களது புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக ஒரு பொது இடத்தில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து அம்மாவீரர்களது புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மாவீரர் துயிலுமில்லத்திலுள்ள புனித புதைகுழிகளில் விதைக்கப்படும்.

வலிகாமம் பிரிவு மாவீரர்களது புகழுடல்கள் மக்கள் அஞ்சலி நிறைவு பெற்றதும். மருதனார்மடத்தில் இருந்து காங்கேசன்துறைவீதி வழியாக ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கோண்டாவில் மேற்கு உப்புமடச்சந்தியை அடைந்து பின்பு இருபாலை -கோண்டாவில் வீதிவழியூடாக மாவீரர் துயிலும் இல்லத்திற்கு கொண்டு செல்லப்படும். [இ]

## 3 தமிழர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊர்காவல் படையினரால் மூன்று தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வந்தாறுமூலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரு தமிழர்களும்—

கரடியனாறுப் பகுதியில் கடந்த புதன்கிழமை ஒரு தமிழரும்— ஊர்காவல்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கரடியனாறுப் பகுதியில் ஊர்காவல்படையினரின், சூட்டுக்கு சிறுமி ஒருத்தியும் காயம் அடைந்தார். [இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 15 — 08 — 1928



மறைவு: 10 — 06 — 1992

### மூத்ததம்பி அமிர்தபிள்ளை

(இ. போ. ச. சாரதி)

திதி: 10 — 07 — 1992

உங்கள் ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கும்:
மனைவி, மகள்மார், மகன்மார்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.

கன்னிமார் கோவிலடி,
வீரமனை, குப்பிளான். [5141]

## 31ஆம் நாள் ஆத்ம சாந்தி அஞ்சலி



மண்ணில்: 27—08—1931

விண்ணில்: 10—06—1992

### திரு. கோவிந்தர் முத்துலிங்கம்

[ஓய்வு பெற்ற மாவட்ட பொறியியலாளர்]

திதி: 10—07—1992 வெள்ளிக்கிழமை

அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெறும் அந்தியேட்டி கிரிகையிலும், வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
[21701]

சபாபதி, கண்மணி,
சகோதரி.

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 22 — 11 — 1952



இறப்பு: 21 — 06 — 1991

### அமரர் வீரசிங்கம் பேரின்பநாதன்

(பேரின்பம்)

திதி: 10 — 07 — 1992

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து, எங்கள் குடும்ப ஒளி விளக்காய் எம்மை வழி நடத்தி, (ஜேர்மனியில் அகால மரணமெய்தி) எம்மை மீளாத் துயரில் ஆழ்த்திய எங்கள் அன்புத் தெய்வமே!

தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், சகோதரர்கள், மக்கள்,
மருமக்கள், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

அந்தோனியார் கோவில் வீதி,
மாதகல். (5117)

## இன்று

யாழ்ப்பாணம், ஜுலை 10

அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தல் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க உடுவில் பிரிவின் இணுவில் அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது. [ஓ-3]

## நாளை

யாழ்ப்பாணம், ஜுலை 10

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' நாவலின் அறிமுக ஆய்வரங்கு நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

திரு. கே. சிறீகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள ஆய்வரங்கில் கவிஞர் புதுவை இரத்தினதுரை அறிமுக உரையாற்றுவார்.

திரு. ஐ. சாந்தன், கலாநிதி சபா ஜெயராசா, திரு. வி. பி. சிவநாதன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். [ஓ-5]

## பிணையில் விடுதலை

கொழும்பு, ஜுலை 10

மத்திய மாகாண சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்றைத் திருடியது என்ற முறைப்பாட்டின் மீது கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மாகாண சபையின் தலைவர் டி. பி. சமரதுங்காவும் அவ்வாகனத்தின் சாரதி இரத்தினசேகராவும் கண்டி நீதிவானால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## இன்று 'நெய்தல்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜுலை 10

'டுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய ''நெய்தல்'' பாடல் ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டு விழா இன்று மாலை 4.00 மணிக்கு குருநகர் சென் பற்றிக்ஸ் கல்லூரி மதுரம் அரங்கில் நடைபெறுகின்றது.

இவ்விழாவின் சிறப்பம்சமாக இன்னிசை வேந்தர் சங்கீதபூஷணம் திரு. பொன் சுந்தரலிங்கத்தின் தமிழீழத் தாயகப் பாடல்களை உள்ளடக்கிய இசை நிகழ்ச்சி இடம்பெறுகின்றது. அனைவரையும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் வெளியீட்டு விழாவுக்கு அழைக்கின்றது. [ஓ]

## கப்பலிலிருந்து பொருள்கள் இறக்க வசதியாக தாங்கி

யாழ்ப்பாணம், ஜுலை 10

பருத்தித்துறை கடற்பகுதியில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்க வசதியாக, மிதவைப் படகுகள் நங்கூரமிடத்தக்க வகையில் ''தாங்கி'' நிர்மாணிக்கப்பட இருக்கிறது.

இதுகால வரை கப்பலுடன் மிதவைப் படகுகள் இணைக்கப்பட்டே பொருள்கள் இறக்கப்பட்டன.

மழைகாலம் ஆரம்பித்த பின்னர் - சுழல் காற்று போன்றவற்றால் பொருள் இறக்கும் வேலைகள் தடைப்படாமல் இருப்பதற்காகவே, இழுவைப்படகுகள் நங்கூரமிட வசதியாக ''தாங்கி'' நிறுவப்படவிருக்கிறது.

எதிர்வரும் 16, 17 ஆம் திகதிகளில் இந்த வேலைகள் நடைபெறவிருப்பதாகவும், இந்த வேலைகளை மேற்கொள்ள இரு மாலுமிகள் கொழும்பில் இருந்து அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## 41 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜுலை 10

அரியாலை திருமகள் சனசமூகநிலைய 41ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நிலைய மைதானத்தில் நடைபெறும்.

அன்று காலை 6 மணிக்கு ''உதயன்'' ஆதரவில் நடைபெறும் 7 மைல் மரதன் ஓட்டப் போட்டியும், பின்னர் பிற்பகல் 2 மணிக்கு விளையாட்டுப் போட்டிகளும் ஆரம்பமாகும்.

அன்றைய தினம் இரவு நாடகங்கள் உட்பட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [ஓ]

## ஹொக்கி அரை இறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 10

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். றோட்டறக்ட் கழகம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டம் ஒன்று இன்று காலை 6-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் ஷப்றா அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக நீல அணி மோதும்.

நாளை காலை 6-30 மணிக்கு நடைபெறும் மற்றைய அரை இறுதியாட்டத்தில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியை எதிர்த்து பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணி மோதும்.

இறுதியாட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். [உ]

## சுதந்திரக்கட்சி கருத்தரங்குகள்

சுதந்திரக்கட்சி எம். பி. அனுர பண்டாரநாயக்கா அரசியலில் பிரவேசித்து பதினைந்து ஆண்டுகள் பூர்த்தி அடைவதை ஒட்டி கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களை நடத்த கட்சி வட்டாரங்கள் ஒழுங்கு செய்துள்ளன.

அனுராதபுரத்தில் இம்மாதம் 14ஆம் திகதி பொதுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. [த-எ]


**New Science Academy**
Jaffna.

**93 A/L**

PHYSICS
திரு. கணேசன்
★ வெப்பவியல் [Heat]
Sat , Sun. 11-00—12-00

CHEMISTRY
திரு. மணியம்
★ சேதன இரசாயனம் (Organic)
பிரிவு I Sat., Sun. 8-00—9-00
பிரிவு II Sat., Sun. 4-30—5-30

ஆரம்பம்:
11-07-1992
[சி-2911]



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## திருமண அழைப்பு

அன்புக்குரியீர்

நிகழும் எழில் வருஷமாம் ஆங்கிரச ஆண்டில் இனிய ஆனித் திங்கள் 27 ஆம் நாளில் (11-07-1992) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியிலிருந்து 2.30 வரை மங்களம் மலிந்திடும் மாண்புறு சுபமுகூர்த்த வேளையில்.

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**யோகேஸ்வரன்**
(Field Offieer, Coconut Cultivation Board)
அவர்கள்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**மனோகரி**
அவர்கள்

ஆகிய இருவர் கரங்களும் சுற்றத்தார் வாழ்த்திட உயர்ந்தோர் ஏத்திட நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டப அரங்கில் இறைவன் அருளால் இனிதே இணைய இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மென்மலர் தூவி மனதால் வாழ்த்த அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. திருமதி நடராஜா
குடும்பத்தினரும்
(விக்னேஸ்வரா நகைமாளிகை, கிளிநொச்சி)
நாகலிங்கசுவாமிகள் வீதி,
சங்குவேலி.

திரு. திருமதி ஹரிதாஸ்
குடும்பத்தினரும்
83, கொல்லர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(21698) இதுவே எமது அழைப்பு (தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழு முடிவு வரும்வரை யுத்தம் தொடர வேண்டுமாம்

## துணை அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 10

★ தெரிவுக் குழுவின் முடிவு வரும்வரை யுத்தம் நடைபெற வேண்டும்.

★ விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்கள் பறிக்கப்படும் வரை யுத்தத்தைத் தொடர வேண்டும்.

இவ்வாறு அரச அமைச்சர்கள் இருவர் கடந்த செவ்வாய் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்கள்.

துணைஅமைச்சரான ஹரேந்திர கொரயா முதலாவது நிலைப்பாட்டையும், அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா இரண்டாவது நிலைப்பாட்டையும் கொண்டிருக்கின்றனர்.

பாதுகாப்பு வரியை ஒரு சதவீதத்திலிருந்து மூன்று சதவீதமாக உயர்த்தியதை அங்கீகரிப்பதற்கான சட்டத் திருத்தம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர்கள் இவ்வாறு கூறினர்.

துணை அமைச்சர் ஹரேந்திர கொரயா கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஏந்தி நாட்டைப் பிரிக்க முயல்கிறார்கள். ஆகையால் யுத்தத்தை நிறுத்துமாறு அரசிடம் வேண்டுகோள் விடுவதால் பயனில்லை. தெரிவுக் குழுவின் முடிவு வரும்வரை யுத்தம் நடைபெற வேண்டும்

சுதந்திரக் கட்சி எம்.பியான நிமால் சிறிபால டீ சில்வா பேசுகையில் —

யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர அரசு விரும்பவில்லை. அவசர கால நிலைமைய நீடித்தபடி பதவியில் இருப்பதே அரசின் நோக்கம் — என்றார்.

அத்தாவுட செனவிரத்ன [ஐ.சோ.மு.] பேசுகையில் — இது போன்ற திருத்தப் பிரேரணைகள் எதிர்காலத்திலும் கொண்டுவரப்படும் என நாம் எதிர்பார்க்கலாம். ஏனெனில் நாட்டில் சமாதானம் ஏற்பட யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். ஆனால் அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் அரசு எடுக்கவில்லை — என்றார்.

வாசுதேவ நாணயக்கார [ஐ.சோ.மு] பேசுகையில் பத்தாயிரம் ரூபாவுக்குமேல் சம்பளம் பெறுவோரிடமிருந்து இந்த வரியை அறவிடுங்கள் — என்றார்.

ஆனந்த தஸநாயக்கா [சு.க] பேசுகையில் இந்த வரி ஏழைகளையே பாதிக்கப் போகிறது: ஏழைகளின் நன்மை கருதி யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் — என்றார்.

பிரதமரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டத் திருத்தம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. [அ-எ-10]

## இஸ்ரேலிய ராணுவ அதிகாரி கொழும்பு வந்துள்ளார்?

கொழும்பு, ஜூலை 10

இஸ்ரேலிய இராணுவ அதிகாரி எனச் சந்தேகிக்கப்படும் — இஸ்ரேல் பாஸ்போர்ட் வைத்திருந்த — நபர் ஒருவர் இந்தியப் பொலீஸாரின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு திருவனந்தபுரத்தில் இருந்து கொழும்பு வந்துள்ளார் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜூன் மாதம் 22 ஆம் திகதி தலைமறைவாகிய இந்த நபர் 25 ஆம் திகதி கொழும்பு சென்றடைந்தார் எனக் கோழிக் கோட்டு பொலீஸார் தெரிவித்தனர்.

பம்பாயிலும், கோழிக் கோட்டிலும் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சில பகுதிகளை வீடியோவில் இவர் ஒளிப்பதிவு செய்தார் எனவும் கூறப்படுகிறது.

இஸ்ரேலிய இராணுவ அதிகாரி எனச் சந்தேகிக்கப்படும் இவர் தனது பெயரை ஜோசப் கிரே எனத் தெரிவித்துள்ளார். [த-5]

## நாய்க் கடிக்கு சிறுவன் பலி

விசர் நாய்க் கடிக்குள்ளாகிய சிறுவன் ஒருவன் கடந்த செவ்வாய் யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானான்.

யாழ்ப்பாணம் மவுண்காமல் வீதியைச் சேர்ந்த பெனடிக்ற் பஸ்ரியான் என்பவரே இறந்தவர் ஆவார்.

விசர்நாய்க்கடி காரணமாக கடந்த 8 நாட்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஐவர் மரணமாகி உள்ளனர். [இ-15]

## 3 ஈழத்தமிழர்கள் சென்னையில் கைது

திருட்டுப் பொருள்கள் எனக் கருதப்படும் 25 பவுண் தங்க நகைகளையும், மூன்று கார்களையும் வைத்திருந்த மூன்று ஈழத் தமிழர்கள் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்

திருமலை, மட்டக்களப்பு, கண்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த மூவரும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-5)

## குரக்கன் செய்கை

அச்சுவேலி, ஜூலை 8

வலி - கிழக்கில் குரக்கன் செய்கையில் பெருமளவு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.


உ

யாழ். காரையம்பதி

ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பிகை

**வாழ்த்து**

திருநீறு திருநூறு மறைகூறு வளவாழ்வு
திகழ்கின்ற திலக நுதலும்
திக்கெலாம் மக்களது மயக்கதுயர் தீர்த்தொளிரும்
தெய்வீக கருணை விழியும்
அருளான தனமூறு கலைஞானக் கிருபையின்
அமுதங் கனிந்த நாவும்
அலைமேவு கடலோடு நிலவோடு கதைபேசும்
ஆணிமுத் தன்ன நகையும்
முருகோடு பொருதாடிப் பெருவாகை முடிசூடும்
முத்தமிழ் இளமை உடலும்
முத்திநெறிச் சித்திபெறு பத்தியுறும் பரவசம்
முதிரொளி பொழியு முகமும்
கருநாக விடபாவக் கறைதீர நெஞ்சத்திற்
கண்குளிரக் காண்ப தெப்போ?
காரையம் பதியிலொரு கூடலுள் வதியுமெழிற்
கன்னியே கலைத் தெய்வமே.

சரஸ்கலாமணி,
(சுக்கிர வார உண்ணா விரதர்),
ஆங்கீரச வருஷ ஆனித்திங்கள் 26 ஆம் நாள்-
உற்சவ ஞாபகார்த்தம்.

ஸ்ரீ பிரம்மரிஷி ஆச்சிரமம்,
10-07-1992. [21681]



உ

அருள்மிகு தலங்காவற் பிள்ளையார் தேவஸ்தானம்
திருநெல்வேலி.

சனீஸ்வரனிற்கு
★ விசேட ஸ்நபன அபிடேகம் ★

மாலை 5 மணி
காலம் 11 — 07 — 1992 சனிக்கிழமை
1. இரவு 8 மணி

**பட்டி மண்டபம்**

நடுவர்: கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
(அமைப்பாளர்: அகில இலங்கை கம்பன் கழகம்)

பொருள்: வீறு கொண்ட பெண்மையின் எழுச்சி பெரிதும் வெற்றிகண்டது..

★ கண்ணகி மூலமே
திரு. க. சிவராமலிங்கம் பி. ஏ.
திரு. ஆ. திருமுருகன்
திரு. க. சிவகுமாரன்

★ பாஞ்சாலி மூலமே
திரு. இரா. செல்வவடிவேல்
திரு. க. குமாரதாசன்
திரு. தி. திருநந்தகுமார்

2. இரவு 10-30 மணி

திருநெல்வேலி காளி கோவிலடி
இளைஞர் மன்றம் வழங்கும்

**காத்தவராயன்**
[கூத்து நாடகம்]
இடம் பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

- அடியார்கள்.

[சி-2563]



MODERN EDUCATION CENTRE
நெல்லியடி.

யாழ்ப்பாண பல்கலைக் கழக
வெளிவாரிப் பரீட்சை
G. A. Q;
1st. in Com.

★ பொருளியல் ★
எஸ். வரதராஜன்

திங்கள் 3-00 — 6-30p m;
3-00 — 5-00 — பொருளியல் தத்துவங்கள்
5-00 — 6-30 — இங்கிலாந்தின் பொருளாதார அபிவிருத்தி

ஆரம்பம்:
13-07-1992
திங்கள் 3-00 p. m.

[சி-2913]



ஓராண்டு நினைவஞ்சலி



மலர்ந்தது;
24-07-1947

உதிர்ந்தது:
10-07-1991

அமரர்
**இரத்தினம் சண்முகநாதன்**
[கணக்காளர் - மாலைதீவு]

எங்கள் தெய்வமே - நீங்கள்
எம்மைப் பிரிந்தின்று
ஆண்டொன்று ஆனாலும் - உங்கள்
அன்பு முகம் எங்களுக்கு மிகத்
தெம்பு தரும் ஆயுதமாய்
ஆண்டாண்டு கால மெல்லாம்
ஆதரவாய் இருந்தெம்மை
வழி நடத்தும் தெய்வ மன்றோ.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

துன்னாலை.

(21667)



ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 01 — 12 — 1938



உதிர்வு: 10 — 07 — 1991

அமரர்
**சரவணமுத்து தனபாலசிங்கம்**
[பூநகரி நீர்ப்பாசனத் திணைக்கள மேற்பார்வையாளர்]

ஓராண்டு மறைந்தாலும் - உங்கள்
நினைவு நெஞ்சை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

141/2, கோவில் வீதி.
நல்லூர், யாழ்ப்பாணம்.

[21592]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 21HP இங்கிலிங் லிஸ்டர் என்ஜினுடன் இறைண்டிங் மில் செற் விற்பனைக்குண்டு. ப. வைத்திலிங்கம், செங்குந்தா வீதி, [கல்வியன்காடு சந்தைக்கு முன்] வெள்ளைப் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு. [21682]

## உரம் விற்பனைக்கு

விவசாயிகளுக்கு தேவையான ஐந்து வருட கால பாவனையில் உள்ள கூட்டெரு, கோழி எரு என்பன (மட்டுப்படுத்தப்பட்ட அளவில்) விற்பனைக்குண்டு. தொடர்பு: V.K.M. Farm, இல. 12, கனகசபை லேன், [யாழ். இந்து பின் பக்கம்] சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். [21695]

## தேங்காய் விற்பனை

தேங்காய், தேங்காய் மட்டை என்பன நியாய விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும். ஸ்ரீ சுகந்தி சேல்ஸ் சென்ரர் [நாவலர் கல்வி கழகத்துக்கு அருகில்]. நாவலர் வீதி, ஆனைப்பந்தி. [21696]

## தேவை

இயந்திர இயக்குனர் வேலை தெரிந்தவர்களும், அச்சுக் கோர்க்கத் தெரிந்தவர்களும் நேரில் வரவும். வேதனம்: ரூ. 2,000 முதல் ரூ. 2,500 வரை. ஏ.எஸ்.ஜே. பிறின்ரிங் வேக்ஸ், மல்லாகம். (4910)

பாலர் பாடசாலை ஆசிரியைகள் தேவை. க. பொ. த. (சா. த.) சித்தியடைந்தவர்கள் ஞாயிறு காலை 10-00 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும். கொட்டடி சனசமூக நிலையம். இல. 127 (29), சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (5136)

## மணப்பெண்கள் தேவை

Non R.C., 31 வயது, I.A.B இற்கும், கத்தோலிக்க 28 வயது ஆசிரியருக்கும், அரசாங்க உத்தியோகத்தருக்கும், செவ்வாய்க் குற்றமற்ற, 28 வயது ஆசிரியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [21693]

## வினா - விடைகள்

க. பொ. த. உயர்தர/ சாதாரண மாணவர்களுக்கு வழி காட்டியாக கடந்த கால கணக்கியல், வர்த்தக பரீட்சை வினா - விடைகள். ஆக்கியோன்: இ. செல்வநாயகம் (B.Com), றோயல் கல்லூரி ஆசிரியர். கிடைக்குமிடங்கள்; மண்டேலா றேடர், யாழ்ப்பாணம்; S.K சாமி அன்கோ, நெல்லியடி. [21618]

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5க்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 12 7-92 ஞாயிறு காலை 9-15 மணிக்கு நடைபெறும். நாவலர் கல்விக் கழகம், நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி. [21697]

## இலவச திருமண சேவை

28 வயது, அச்சுவினி, செவ்வாய் 1, B.Sc. ஆசிரியைக்கு தகுந்த தரத்தில் மணமகன் தேவை. சந்திப்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [5133]

## புலமைப்பரிசில் பரீட்சை

யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் புலமைப் பரிசில் மாதிரிப்பரீட்சை 12-7-92 ஞாயிறு மு.ப 8-00 — மு.ப 11-00 நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [21684]

## துர்க்கா திருமண சேவை

இல. 116, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். 1992-07-01 தொடக்கம் ஆரம்பித்துள்ளது. திங்கள், புதன், ஞாயிறு ஆகிய நாட்களில் தொடர்பு கொள்ளலாம். குறிப்பு: படத்துடன் தொடர்பு கொள்ளவும். (4997)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம் அனைத்துக்கும் நாடுங்கள். தினமும் காலை 8மணி முதல் 12 மணி வரை. த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை — 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [நேரம் பிற்பகல் 2 முதல் 6 வரை] [21687]

## தட்டச்சு - றோணியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் ''அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்'', இல. 15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-2909)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளி பிற்பகல் 1-45 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக திரு. க சி. குகதாஸனும், திருமதி அ. குகதாஸனும் கலந்து கொள்வர்.

[த-5]

## கீன்
### கல்வி நிலையம்
### திருநெல்வேலி.

பொருளியல்
எஸ். வரதராஜன்

**A/L 93**
சந்தைச் சமநிலை
ஞாயிறு பி. ப. 1-00

**A/L 94**
கேள்விக் கோட்பாடு
ஞாயிறு பி. ப. 2-00

ஆரம்பம்:
**12-07-1992**
ஞாயிறு

(சி-2561)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து உடற் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் 1992-07-31 வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம்: ரூபா 6,000 — 10 X 200 — 8,000/- (வினைத்திறமைகாண் தடை) — 8,250 — 7 X 250 — 10,000/- மாதமொன்றுக்கு.

தகைமைகள்: (அ) உடற் கல்வியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் அல்லது ஒத்த அல்லது உயர் தகைமைகளுடன் அத்தகைய பட்டத்தைப் பெற்றதன் பின்னர், பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்துவதிலும், செயற்படுத்துவதிலும் குறைந்த பட்சம் 12 வருட அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் அல்லது உயர்தொழில் தகைமைகளுடன் அத்தகைய பட்டத்தைப் பெற்றதன் பின்னர், பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்துவதிலும் குறைந்த பட்சம் 15 வருட அனுபவம்.

வயது; 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: நேர்முகப் பரீட்சை மூலம்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களையும், இதர விவரங்களையும் இப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23 X 10 ச. மீற்றர் அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் அவர் வைக்கப்படுவார்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் தள்ளுபடி செய்யப்படும்.

உடற்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-07-07 [சி/2550]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 01 — 04 — 1910

மறைவு: 10 — 06 — 1992

### வினாசித்தம்பி ஐயாத்துரை
(இணுவில்)

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நெஞ்சம் மறவாத நினைவுகளுடன்,
உங்கள்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

லதா பவனம்,
இணுவில் மேற்கு.

[சி-2908]

## முதலாம் வருட நினைவலைகள்



### லெப். காந்தன்
### சுப்பிரமணியம் சிவகணேஷ்
(நெலுக்குளம் - வவுனியா)

அன்னை மடியில்: 07 — 08 — 1972

மண்ணின் மடியில்: 13 — 07 — 1991

திதி: 29 — 06 — 1992

எல்லைகள் மீறி எதிரி கால்பட
நெஞ்சு பொறுக்குமோ - என்று
பள்ளியைப் பாதியில் விடுத்து
படையணி சேர்ந்தவனே!
போரினால் சிவந்து
வீரம் விளைந்த எல்லை மண்ணில்
பாய்ந்து பல களமாடிய வீர வேங்கையே!
அன்று ஆனையிறவில் புலிக்கொடி நாட்ட
வெடித்த போரில் நீ விதையாகி
இன்று ஓராண்டு நிறைகின்றது;
வீரனே!
வெடித்த போர் விடிவின்றி ஓயாது
விடிவிலே கொடிபறக்கும் அந்நாள்
உன் லட்சியம் வென்ற நாள்.

உடன்பிறவாத;
சகோதர, சகோதரிகள்.

ஆனைக்கோட்டை.

[21678]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# நிரந்தரமாக நிறுத்துவதற்கு...

பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்குத் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது ஊர்ஜிதமாகிவிட்டது. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, 1991—92 ஆம் கல்வி ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு வெளியிட்ட வெட்டுப் புள்ளி விவரம் தரப்படுத்தலை வெட்ட வெளிச்சமாக எடுத்துக் காட்டுகிறது.

கொழும்பில் மின்சார வெளிச்சத்தில், மன நிம்மதியுடன் பயின்று முதலில் நடந்த பரீட்சையை எழுதிய சிங்கள மாணவர்கள் குறைந்த புள்ளிகளுடன் பல்கலைக்கழகத்தில் சேர வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கு - கிழக்கில் மண்ணெண்ணெய் விளக்கிலும், குண்டு வீச்சு, ஷெல் வீச்சுகளின் மத்தியில் மனமொன்ற முடியாமலும், உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையிலும், பரீட்சை நடக்குமா நடக்காதா என்ற சூழ்நிலையிலும் கல்வி பயின்ற தமிழ் மாணவர்கள், சிங்கள மாணவரைவிட அதிக புள்ளிகள் எடுத்தாலும் பல்கலைக்கழகக் கதவு அடைக்கப்பட்டிருக்கிறது!

தமிழர்களின் கல்வி வளத்தை நிர்மூலமாக்கிவிட வேண்டும் என்ற சிங்கள அரசுகளின் நீண்டகாலச் சூழ்ச்சியில் இது ஓர் அங்கம்.

தமிழர்கள் தங்களுக்கென ஒரு நாட்டையும், அரசையும் உருவாக்கினால் அன்றி, இத்தகைய அநீதிகள், அநியாயங்கள், சூழ்ச்சிகள், தொடர்ந்து கொண்டே இருக்கும். அநீதி செய்யவில்லை, நியாயத்துடனேயே நடக்கிறோம் என்று கூறி உலகை நம்ப வைத்துக் கொண்டு, சிங்கள அரசு இவ்வாறு தொடர்வதற்கு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். அதற்கு ஒரே ஒரு மார்க்கம் தமிழர்கள் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கக் கூடிய ஒரு நிலையை எட்டுவதேயாகும்.

அந்த நிலையை அரசியல் தீர்வு வழியாக எய்த முடியுமா என்பது சந்தேகத்துக்குரியதாகும். கடந்த கால வரலாறு அதனையே காட்டுகிறது. தமிழர்கள் பலம் மேலோங்கியவர்களாக நின்றால் மட்டுமே சிங்கள அரசுகள் படி இறங்கி வரும். இராணுவ மேலாதிக்க நிலையை வைத்துக் கொண்டு தமிழர்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்க முயலும் அரசுக்குப் பதிலடி கொடுத்தாக வேண்டும்.

தமிழர்களின் பலம் ஓங்க வேண்டுமானால், சிங்கள அரசு இராணுவ மேலாதிக்க நிலையை எய்தாமல் தடுக்கப்பட வேண்டுமானால், தமிழர்கள் தமது போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும். சிங்கள அரசின் இராணுவ மேலாதிக்க நிலையைத் தகர்க்கக் கூடிய பலம் தமிழர்களுக்கு உண்டு என்று கடந்த இரண்டு வருடங்களாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலை மாறாதிருக்க தமிழர்களின் மனம் ஒன்றிய ஒற்றுமையான போராட்டம் தொடர வேண்டும்

சகல தமிழர்களும் தங்கள் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகளுக்கு உறுதுணையாக நின்று; பக்கபலமாக இருந்து தமது பங்களிப்பை நல்க வேண்டும். அது ஒன்றே தரப்படுத்தல் போன்றே பலவகையான பல வடிவங்களிலான அநீதிகளையும், அழிப்புகளையும் நிரந்தரமாக நிறுத்த வல்லது. இதனைச் சகல தமிழர்களும் வயது, பால், சமூகநிலை வேறுபாடின்றி உணர வேண்டும். உணர்ந்து செயற்பட வேண்டும்.

# ஒய்வூதிய 'வவுச்சர்'கள் கிளிநொச்சியில் தேக்கம்!

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். மாவட்ட ஒய்வூதியர்களின் இம்மாதத்துக்கான (ஜூலை) ஒய்வூதிய வவுச்சர்கள் கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. ஆனால் அவற்றை இங்கு எடுத்துவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஒய்வூதிய வவுச்சர்கள் எடுத்து வரப்பட்ட தகவல் நேற்று யாழ். அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்ட நிலையில் அவற்றை இங்கு எடுத்துவர முடியாது என்றும், எனவே ஒய்வூதிய வவுச்சர்களை மீண்டும் கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்குப் பெற்று — அடுத்து வரவுள்ள கப்பலில் அவற்றை இங்கு அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்புக்கு செய்தி அனுப்பியுள்ளார். [த-5]

## மருந்து வகைகளும் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 10

இவ் வாரம் கொழும்பில் இருந்து வந்த குமண கப்பலில் யாழ். ஆஸ்பத்திரியின் இம் மாத பாவனைக்குரிய எரிபொருள் மற்றும் மருந்துவகைகள் என்பன அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. [த-15]

### கட்டுநாயக்காவில்

## 84 தங்க பிஸ்கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன!

கொழும்பு, ஜூலை 10

அபுதாபியில் இருந்து இலங்கை வழியாக திருவனந்தபுரம் செல்வதற்காக எயர் லங்கா விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த இரண்டு இந்தியப் பிரஜைகளிடமிருந்து 53 லட்சம் ரூபா பெறுமதியான 84 தங்க பிஸ்கட்டுகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

விமான நிலைய ஒய்வு அறையில் இந்த இரு பிரயாணிகளும் அமர்ந்திருந்த வேளையில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் அவர்களின் பிரயாணப் பொதிகளைச் சோதனையிட்டனர் என்றும் —

அப்போது பொதிகளில் தங்க பிஸ்கட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தங்க பிஸ்கட்டுகளை பறிமுதல் செய்த அதிகாரிகள் பிரயாணிகள் இருவரையும் இந்தியா செல்ல அனுமதித்தனர். [உ]

## நீலகிரி மாவட்டத்தில் 2 ஈழத் தமிழர்கள் கைது

சென்னை, ஜூலை 10

நீலகிரி மாவட்டம் தொட்டபெட்ட மலைப்பகுதிகளில் 2 ஈழத்தமிழர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

7 ஈழத்தமிழர்கள் இப்பகுதியில் ஆயுதங்களுடன் ஒளிந்திருப்பதாகத் தகவல்கள் கிடைத்ததை அடுத்து அங்கு விரைந்த பொலீஸார் இருவரைக் கைது செய்தனர் என்றும், மற்ற ஐவரும் தப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

திருச்சி மாவட்டம் துறையூர் அகதி முகாமிலிருந்து தப்பித்துச் சென்றிருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படும் இந்த இருவரையும் உயர் பொலீஸ் அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். [த]

## ஜே. வி. பி. சந்தேக நபர்கள் 100 பேர் விடுதலையாவர்

கொழும்பு, ஜூலை 10

பாதுகாப்புப் படையினராலும், பொலீஸாரினாலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜே.வி.பி. சந்தேக நபர்களில் நூறு பேர் எதிர்வரும் 14 ஆம் திகதி விடுதலை செய்யப்படுவார்கள்.

உத்தியோக பூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

பிரதமர் டி.பி. விஜேதுங்கா தலைமையில் அவரது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் வைத்து இவர்கள் விடுவிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. [த-எ]

## ஆரம்ப ஆசிரியர் பரீட்சை அனுமதி அட்டை விநியோகம்

ஆரம்ப ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் நேற்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு எடுத்து வரப்பட்டு உரியவர்களிடம் விநியோகிக்கப்பட்டன.

பரீட்சை அனுமதி அட்டைக்கு வருவோர் தமது அடையாள அட்டையையும் எடுத்து வரும்படி கோரப்படுகின்றனர்.

40 பரீட்சை நிலையங்களில் நடைபெற உள்ள இப்பரீட்சைக்கு 6000 க்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

நாளை சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு திட்டமிட்டபடி பரீட்சை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-162-111)

## உரிமைகள் பறிபோனால் மீண்டும் போராடுவோம்!

### அமைச்சர் தொண்டமான்

கொழும்பு, ஜூலை 10

போராட்டம் மூலம் பெறப்பட்ட உரிமைகள் மீண்டும் பறிபோகுமானால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும். தேவை ஏற்பட்டால் மீண்டும் போராட்டம் ஒன்றை நடத்தவும் அது தயங்காது.

இ. தொ. கா. தலைவரும், உல்லாச பயணக் கைத்தொழில் துறை அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் இவ்வாறு தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. [த]

## ஆறு அரசியல் குண்டர்கள் நுவரெலியாவில் கைது!

கொழும்பு, ஜூலை 10

அரசியல் குண்டர்கள் என்று வர்ணிக்கப்படும் ஆறு நபர்களை நுவரெலியாவில் பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

அறுவரும் அதிகாரம் படைத்த இரண்டு அரசியல்வாதிகளின் ஆதரவாளர்கள் என்று சொல்லப்படுகின்றது.

சச்சரவு ஒன்று தொடர்பாக பொலீஸார் சிலரைக் கைது செய்து காவலில் வைத்தனர். அடுத்த நாள் அரசியல் குணடர்கள் என்று வர்ணிக்கப்பட்ட இந்த அறுவரும் பதில் நடவடிக்கையாக இரண்டு பொலீஸ்காரரைத் தாக்கினார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. [த-எ]

## யாழ். சாயி சமித்தியின் வெள்ளிவிழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணம், பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியின் வெள்ளிவிழா நாளை தொடக்கம் நான்கு நாட்களுக்கு நடைபெற உள்ளது. சேர். பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சமித்தி மண்டபத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

நாளை நடக்கவிருக்கும் முதல் நாள் நிகழ்ச்சிகளில் இலட்சார்ச்சனை, தியானம், திருமுறை ஓதுதல், நற்சிந்தனை பாடுதல், வேத வாக்கியங்கள் வாசித்தல், திருவிளக்குப் பூசை என்பன உட்படப் பல நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

இரண்டாம் நாள் (ஞாயிறு) நிகழ்ச்சிகளில் மனித மேம்பாட்டுக் கல்விப் பொருட்காட்சி, விசேட உரை, பஜனை மண்டலிகள், நாம பஜனை கலை நிகழ்ச்சிகள் எனபன அடங்கும். கல்விப் பொருட்காட்சியை பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் திறந்து வைப்பார். திருமதி எஸ். இரவீந்திரன், சாயி நிறுவனங்களின் கல்விச்சேவை குறித்து விசேட உரையாற்றுவார்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகளில் சர்வமத பிரார்த்தனை, சிறுவர் நிகழ்ச்சி, பண் இசை, கலை நிகழ்ச்சிகள் என்பனவும் அடங்கும்.

திரு. எஸ். ஆர். சரவணபவான், திரு. ஏ. இராஜகோபால் ஆகியோர் விசேட உரைகள் நிகழ்த்துவர்.

நான்காம் நாள் நிகழ்ச்சிகளில் சர்வ தர்ம பிரார்த்தனை, பாதபூசை, நாராயண சேவை கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் அடங்கும்.

அகில இலங்கை சாயி நிறுவனங்களின் தலைவர் திரு. எஸ். சிவஞானம், திரு. எஸ். முத்துலிங்கம், திரு. வி. சேனாதிராசா ஆகியோர் விசேட சொற்பொழிவுகள் நிகழ்த்துவர்.

நிகழ்ச்சிகள் நாளாந்தம் காலை ஒன்பது மணி முதல் [illegible] நடைபெற ஏற்பாடாகி உள்ளது. [அ]

## ஜெயின் குழுவின் விசாரணை மாத இறுதியில் ஆரம்பம்

புதுடில்லி, ஜூலை 10

இம் மாதக் கடைசி வாரத்தில் ஜெயின் ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பிக்கவிருக்கிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்தின் பின்னால் சதிச் செயல்கள் இருந்தனவா என்பதைக் கண்டறிய புதுடில்லி அரசாங்கம் நீதியரசர் ஜெயின் தலைமையில் இந்த இரண்டாவது விசாரணைக் குழுவை நியமித்திருப்பது தெரிந்ததே.

இதே வேளை —

ராஜீவ் கொலை தொடர்பாக பரபரப்பான வாக்குமூலம் ஒன்றை சத்தியக் கடதாசி வடிவில் வர்மா ஆணைக்குழு முன் சமர்ப்பித்த திருமதி குமுதவல்லிக்கும் ஜெயின் ஆணைக்குழு நோட்டீஸ் பிறப்பித்துள்ளது. திருமதி குமுதவல்லி மீது நோட்டீஸ் பிறப்பித்து சில வாரங்களே ஆகின்றன என்றும் — அப்பெண் இன்னும் தமது சத்தியக் கடதாசியைச் சமர்ப்பிக்கவில்லை என்றும் நீதியரசர் ஜெயின் தெரிவித்தார்.

ராஜீவ் கொலையாளிகளுடன் இந்திரா காங்கிரஸ் எம்.பியான திருமதி மரகதவல்லி சந்திரசேகரின் புதல்வியான திருமதி லதா பிரியம்குமார் காணப்பட்டார் என்று திருமதி மரகதவல்லி வர்மா ஆணைக்குழு முன்னிலையில் தாம் சமர்ப்பித்த சத்தியக் கடதாகியில் குற்றஞ்சாட்டி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விசேட விசாரணைப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு மற்றும் றோ உளவு அமைப்பு ஆகியன சமர்ப்பித்த அறிக்கைகள் மற்றும் சத்தியக் கடதாசிகளில் போதுமான விவரங்கள் இல்லாமையால், மேலதிக தகவல்களை சமர்ப்பிக்கும்படி அந்த அமைப்புக்களை நீதியரசர் ஜெயின் கேட்டுள்ளார். [த-எ]

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 10

இராமநாதன் கலலூரி பரிசளிப்பு விழா இன்று வெள்ளி பிற்பகல் 1-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக வட பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கலந்து கொள்கிறார். [த-5]

## திருமலையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

கொழும்பு, ஜூலை 10

திருகோணமலை மாவட்டம் சீனன் குடாவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்று நிறுவப்படவுள்ளது.

திருகோணமலைக்கு அண்மையில் விஜயம் செய்தபோது எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் சந்திரா பண்டார இத்தகவலை வெளியிட்டார் [த-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி சந்திரா மயில்வாகனம்

வேம்படி அன்னை ஈன்ற செந்தாமரையாள்,
மகிழ்வுடனே மாசற்ற மாபெரும் சேவை புரிந்தார்,
சாரணியரின் சாம்பவியாகச் சந்திரா,
கடமை கண்ணியம் கட்டுப்பாடு கருணையுடன்,
சாரணியர் எம்மைச் சீரிய பாதையில் வழி நடத்தி,
குழந்தைகளாய்க் கரங்களில் அணைத்த தாயே!
நிமிர்ந்த தோற்றமும்,
பால் முகத்தில் மின்னிடும் புன்சிரிப்பும்,
சாரணியச் சின்னமும்,
எம்மகத்தினின்று அகலவில்லை யம்மா!
கணிதத்தின் கற்பகமே கல்லூரியின் காதலியே,
உன் பாதம் பணிகின்றோம் குருவே!

வழிகாட்டிகள்,
சாரணியர்கள்.

3rd, Jaffna,
வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம். [5142]

# எங்கள் குலவிளக்கு அணைந்து விட்டது!



மலர்வு: 03 — 12 — 1915
உதிர்வு: 06 — 07 — 1992

காலஞ்சென்ற முகாந்திரம் S. P. இராசநாயகம்
அவர்களின் அன்பு மனைவி

## திருமதி பத்மாவதி இராசநாயகம்

அவர்களின் மறைவு குறித்த

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எங்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டி, எம்மையெல்லாம் வாழவைத்த தெய்வத் தாயே! எங்கள் மீது நீங்கள் அள்ளிச் சொரிந்த அன்பு எம் உயிர் உள்ள வரை அழியாதம்மா!

பாசமிகு அன்னையாய், அறிவுரைகள் வழங்கும் ஆசானாய், நோய் தீர்க்கும் மருத்துவராய், அம்மாவாய், அத்தையாய், அம்மம்மாவாய் வாழ்ந்து தாலாட்டி சீராட்டி பாராட்டி எங்களை அரவணைத்து வளர்த்து அமரத்துவம் எய்திய தாயே!

எங்களின் கண்ணீரால் உங்கள் பாதங்களைக் கழுவுகின்றோம் அன்னையின் ஆன்மா ஆடவல்லான் திருவடியில் அமைதியுறப் பிரார்த்தித்து நிற்கும்,

(அன்னாரின் பூதவுடல் 7-7-92 அன்று மாலை 6 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது).

19 / B. A தம்பிலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.
[21702]

## உற்சவம்

சுன்னாகம் அருள் மிகு ஐயனார் கோவில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று காலை 10 மணியளவில் நடைபெறும். மாலை திருக்கல்யாண விழா நடைபெறும். [ஓ-89]

## வேலணை வாசி உயிரிழப்பு

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் லொறிச் சாரதியான சாத்தான் கோபால் [56 வயது] என்பவரின் சடலம் ஊரியான் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இவர் ஊரியான் பகுதியில் ஷெல் வீச்சுக்கு இலக்காகி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

இவரது சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. [ஒ-15]

## விடுதலை

"ஜன கோஷா'' இரைச்சல் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட நவசம சமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்தினாவும் மற்றும் ஏழு பேரும் கண்டி நீதிவானால் தலா ஆயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

## தபால்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குக் கிடைத்தது. ஆனாலும் ஊரடங்கு காரணமாக தபால் பொதிகள் இறக்கப் படும் திகதி, நேரம் போன்ற விவரங்களை செ. ச. ச ஆழு அதிகாரியினால் குறிப்பிட முடியவில்லை.

★ 8. 7. 92 இலும் காலை 9. 35 மணி வரை அதே நிலையே தொடர்ந்தது. ஆனால் அன்று காலை 10. 10 மணியளவில் யாழ். செயலகம் மூலம் கிடைத்த செய்தியில் தபாற்பொதிகளை இறக்கலாமெனத் தெரிவிக்கப் பட்டது.

★ ஆனால் செயலகம் வாகன ஒழுங்கு எதனையும் செய்து தரவில்லை. செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் லொறிகள் எதுவும் உடனடியாக இல்லாமையால் பிரதம தபாலதிபரின் முயற்சி கை கூடவில்லை தபாற் பொதிகளை எடுத்து வருவதற்கான ஒழுங்குகளை அஞ்சல் மா அதிபர் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையுடன் மட்டுமே செய்துள்ளார்.

ஆசிரியர் குறிப்பு: கப்பலில் இருந்து ஏனைய பொருள்கள் புதன்கிழமை இறக்கப்பட்ட போதிலும், மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தபால்கள் இறக்கப்படவில்லை என்பதனைச் சுட்டிக் காட்டுவதே உதயன் செய்தியின் நோக்கமாக இருந்தது. வாகன விவகாரம் அதிகாரிகள் சம்பந்தப்பட்டது. தமக்கு உரிய நேரத்தில் தபால் கிடைக்க வேண்டும் என்பதே மக்களது எதிர்பார்ப்பு; அதுவே உதயனின் விருப்பமுமாகும். [அ-3-15]

## இயக்கச்சிக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயரத்தில் பறந்தபடி குண்டு வீச்சுக்களை நடத்துவதால், தாக்குதல்கள் இலக்குத் தவறியும் உக்கிரம் குறைந்தும் இருப்பதாகவும் —

இதனால் புலிகள் போராளிகள் படையினரை மிகக் கடுமையாக எதிர்த்துத் தாக்கிச் சமர் புரிந்து வருகின்றனர் என்றும் — களத்தில் இருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அக்ரோஷமான தாக்குதல்களினால் படையினருக்கு மிகப் பெரியளவில் உயிரிழப்புக்களும், இராணுவ சாதனை இழப்புக்களும் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஓ 3-15]

# பொதுமக்களின் கொலைக்கு படைகளே காரணம்

## மன்னிப்புச் சபை சொல்கிறது

1990 ஜூன் மாதத்தில் வடக்கு - கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின்னர் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கொலை செய்யப்பட்டதற்கு ஸ்ரீலங்கா அரசாங்க படைகளே காரணம் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

1991 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா நிலைமை குறித்தான அறிக்கையில் மன்னிப்புச் சபைஇதனைத் தெரிவித்திருக்கிறது. இந்த அறிக்கை நேற்று (வியாழக்கிழமை) லண்டனில் வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எந்த வித விசாரணையும் இன்றி மக்கள் படுகொலை செய்யப்படுவதோடு, இடரென காணாமலும் போய் விடுகின்றனர். அரசின் இராணுவத்தினால் மக்கள் படுகொலை செய்யப்படும் போது அந்த இராணுவத்தினரை விசாரிக்கச் சட்டத்தைத் திருத்தும் நடவடிக்கைக்கு அரசு இணங்க மறுத்து வருகின்றது.

இராணுவத்தினர் படுகொலைகளைச் செய்யும் போது அதை விசாரிக்க இயலாதவாறு அவர்களுக்கு தண்டனை தவிர்ப்பு உரிமை வழங்கப்பட்டுள்ளது — என்று உள்ளது. (அ-ஏ-10)

## சனசமூகநிலைய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

வலிகாமம், நல்லூர், யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களுடனான முக்கியமான கலந்துரையாடல் ஒன்று நாளை (சனி) பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் சகல நிர்வாக சபை உறுப்பினர்களையும் சமூகந்தருமாறு விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு கேட்டுள்ளது. (இ)

# மரண அறிவித்தல்கள்

## மருதப்பு பரமலிங்கம் (பரமி)

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தை சேர்ந்த மருதப்பு பரமலிங்கம் 07-07-92 அன்று சுவீஸில் அகால மரணமானார்.

இவர் மருதப்பு தம்பதிகளின் அன்பு மகனும், லீலாதேவியின் அன்புக் கணவரும், தயானந்தன், ஹேமா, சத்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும் திருஞான சம்பந்தன் (சுவீஸ்), சிவலிங்கம் (சுவீஸ்), ஆகியோரின் சகோதரரும் இரத்தினம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுவீஸில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அ. நாகமணி.
(பாபு)

விக்டர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [21700]

## வீரவேங்கை அன்பழகன் (பழனி)
### (கோபாலர் விஸ்வேஸ்வரன்)

வீரவேங்கை அன்பழகன் (பழனி) - கோபாலர் விஸ்வேஸ்வரன் காலமானார்.

இவர் கருகம்பனையைச் சேர்ந்த காலஞ்சென்ற சி. கோபாலர் (முன்னாள் அதிபர், மட்/பெரிய கல்லாறு ம. வித்தியாலயம்), பத்மினி கோபாலர் (ஆசிரியை யாழ். கன்னியர் மடம் ம. வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் புதல்வனும், சிற்சபேசன் (யாழ். பல்கலைக்கழகம், பௌதீகத்துறை), மைதிலி (ரஷ்யா), வீரமரணமடைந்த லெப். நெல்சன் (கோபாலர், சுந்தரேசன்), நடேஸ்வரன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-07-92 இன்று நடைபெறும்.

தகவல்:
திருமதி பத்மினி கோபாலர்.

198, கோவில் வீதி,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம். [21703]

## வீரசிங்கம் குலமணி

வீரசிங்கம் - செல்வம்மா தம்பதிகளின் அருமை மகள் குலமணி அகால மரணமானார்.

இவர் குணரத்தினம் (ஓய்வுபெற்ற எம். ஓ. எச். அலுவலர்), குணவதி, குணேஸ்வரன் (உரக்கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை), குணபாலச்சந்திரன், குணபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியேஸ்வரி, தேவதாசன் (ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்), சரஸ்வதி, வைத்தீஸ்வரன் (உதவி அரச அதிபர் பணிமனை - தெல்லிப்பளை) ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (10-07-92) பி. ப. 4 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
செ. வைத்தீஸ்வரன்.
(மைத்துனர்)

இலங்கை வங்கி முன்பாக,
சுன்னாகம். [21704]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10 07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org